தொழிலாளர் நீதிமன்றம் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்து வருகிறது. எனவே, மக்கள் நீதிமன்றம் (Lok Adalat) அமைத்திட அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க Lok Adalat என்கிற மக்கள் நீதிமன்றம் அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 12 தொழிலாளர் நீதிமன்றங்களும், சென்னையில் ஒரு தொழிலாளர் தீர்ப்பாயமும் இயங்கி வருகிறது. எந்த மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றத்தில் அதிக வழக்குகள் உள்ளனவோ, அங்கே மக்கள் நீதிமன்றம் அமைக்க அரசு, சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளருக்குப் பரிந்துரை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் பதிலுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

136—

நவீன நீரூற்று

***62021—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 மே 4]

நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா கோயில் குளத்தை சுத்தப்படுத்தி நவீன நீரூற்று அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்:

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் நிருவாகத்திற்குட்பட்ட நாகர்கோவில், அருள்மிகு நாகராஜா திருக்கோயில் திருக்குளம் ஒன்று நீர் நிறைந்துள்ளது. இதனைத் தூர் வாரி, செப்பனிட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, திருக்கோயில் நிருவாகத்தில் போதுமான நிதி வசதியில்லாத காரணத்தால், சுற்றுலாத் துறையின்மூலம் சுத்தப்படுத்தி, அணுகு பாதை அமைக்க சுமார் 7 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 20-4-2010 அன்று அனுப்பப்பட்டுள்ளது. துறையின் சார்பாகவும் 50 சதவிகிதம் தொகையினை வழங்கிட இசைவு அளிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையின் இசைவு கிடைக்கப்பெற்றவுடன், நாகர்கோவில், நாகராஜா கோயில் குளத்தினை சீரமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். நவீன நீரூற்றைப் பொறுத்தவரையில், இது பக்தர்களுக்காக அமைந்துள்ள குளம் என்பதால் திருக்கோயில் ஆகம விதிகளுக்கு உட்பட்டு, ஸ்தபதியின் கருத்துருவின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி புரிகிறாரோ, அப்போதெல்லாம் ஓடாத தேரெல்லாம் ஓடும். குடமுழுக்குகள் நடைபெறாத இடங்களில் எல்லாம் குடமுழுக்குகள் நடைபெறும். நாகர்கோவில் நகரின் மத்தியிலுள்ள நாகராஜா கோயிலை வைத்துத்தான், இந்தப் பகுதிக்கு நாகர்கோவில் என்று பெயர் வந்தது. கடந்த ஆட்சிக் காலத்தில் சரியாகக் கவனிக்கப்படாமல் இருந்த அந்தக் கோயிலைச் சுற்றி, தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான் மின் விளக்குகள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கோயில் வளாகத்தில் உள்ள குளம் பல ஆண்டுகளாகத் தூர் வாரப்படாமல் மிகவும்

TRUTH ALONE TRIUMPHS

மோசமாக உள்ளது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் வந்து செல்கின்றனர். எனவே, தலைவர் கலைஞருடைய அரசு அந்தக் கோயிலின் முக்கியத்துவத்தைக் கருதி, குளத்தைத் தூர் வாரி சுத்தப்படுத்துவதோடு, அங்கே ஏராளமான பக்தர்கள் தினமும் வருவதால் கோயிலின் தெற்குப் பக்கம் உள்ள வாசலின் எதிரே ரவுன்டானா அமைத்து, சுற்றுலாப் பயணிகளும், பொது மக்களும் பயன்படத்தக்க வகையில், நவீன நீருற்று வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீருற்றுகளை அமைப்பதைப் பொறுத்தவரையில், அது சுற்றுலாத் துறையைச் சார்ந்ததுதான். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், 'அங்கே அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்' என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அறநிலையத் துறையும், சுற்றுலாத் துறையும் இணைந்து பேசி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பல்வேறு இடங்களில் உள்ள சிறிய, சிறிய இந்துக் கோயில்கள் பராமரிப்பின்றி, குறிப்பாக மின் விளக்கு வசதியின்றி, யாரும் கவனிப்பாரற்று இருக்கிறது. எல்லாவற்றையும் கவனிக்கும் தலைவர் கலைஞர் அரசு, மின் இணைப்பு இல்லாத கோயில்களுக்கு இலவசமாக, ஒரு விளக்காவது எரியக்கூடிய வகையில் மின் வசதி செய்து கொடுக்க வேண்டும். சாலையோரங்களில் பராமரிப்பின்றி உள்ள கோயில்கள் பல இருக்கின்றன. அவற்றால் சில இடங்களில் சாலைகள்கூட குறுகலாக இருக்கின்றன. எனவே, பெரும்பாலான அந்த இடங்களில் விபத்துகள் நடக்க வாய்ப்பிருக்கிறது; நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றை அரசு கருத்தில்கொண்டு, இதிலே அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அத்தகைய கோயில்களை வேறு இடத்தில் மாற்றி வைத்து, சாலைகளில் விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2010 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டில் 38,625 திருக்கோயில்கள் இருக்கின்றன. இந்தத் திருக்கோயில்கள் எல்லாம், இன்று, நேற்று உருவானவை அல்ல, ஆயிரம், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், நம்முடைய முன்னோர்களால், மன்னர்களால் அப்போது உருவாக்கப்பட்ட திருக்கோயில்கள். ஆகவே, இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய போக்குவரத்து அடர்த்தியின் காரணமாக இடையூறாக இருக்குமேயானால், சில இடங்களில் சாலை விதிகளுக்குட்பட்டு, மாற்றியமைக்கின்ற பணியும் நடக்கின்றது. ஆங்காங்கு இருக்கக்கூடிய சூழ்நிலைகளைப் பொறுத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ரோப் கார் அமைக்கும் பணியின் அடிக்கல் நாட்டு விழா எப்போது நடைபெறும் என்று கடந்த வாரம் வினா எழுப்பினேன். இந்த ஆட்சியிலே ஒரு வாரத்திற்குள்ளாகவே பதில் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அருள் அன்பரசு, மூலக் கேள்வி, குளத்தைத் தூர் வாருவது பற்றியது.

திரு. அருள் அன்பரசு: அதுதான், அதோடு சேர்ந்து வருகிறது. வருகின்ற 9 ஆம் தேதியன்று அடிக்கல் நாட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு முதலமைச்சர், தளபதி மற்றும் அறநிலையத் துறை அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சோளிங்கரிலே தட்டான்குளம் என்ற ஒரு இடம் இருக்கின்றது. அதில்தான் பக்தர்கள் எல்லாம் புனித நீராடி, அருள்மிகு யோக நரசிம்மரை தரிசிப்பது வழக்கம். கடந்த ஒரு மாதத்திற்குள்ளாக அந்தக் குளத்திலே உள்ள சேற்றில் நிறைய பக்தர்கள் ஆழம் தெரியாமல் காலை விட்டு மரணம் அடைந்த செய்திகள் நிறைய வந்திருக்கின்றன. எனவே, அந்தக் குளத்தை சீர் செய்து,

சுத்தப்படுத்தி, அங்கே அவர்களுக்கு சிறப்பான வழியிலே தரிசிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அதற்கு விடையளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வினா எழுப்புகின்றேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தத் திருக்குளத்தை என்னிடத்திலும் அவர்கள் காட்டினார்கள். ஆனால், நாங்கள் பார்க்கின்ற நேரத்தில் அது நல்ல நிலையில் இருந்தது. வருகிற 9 ஆம் தேதி நானும், நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும், அண்ணன் திரு. ஞானசேகரன், திரு. அருள் அன்பரசு போன்றவர்களெல்லாம் அங்கே செல்லவிருக்கின்றோம். அப்போது அந்தக் குளத்தைப் பார்வையிட்டு, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

நியமனம்

***121420—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் பட்டதாரி மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாநராட்சிப் பள்ளிகளில் 1-6-2009 அன்றைய நிலவரப்படி காலியாகவுள்ள 48 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS